நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம்
14 DEC 2009
சேப்பாக்கம், சென்னை-5

## சுருக்கம்

தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு வரிவிலக்கு – 2009–2010 –ஆம் ஆண்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு (மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள்) ஏற்படும் வருவாய் இழப்பீட்டினை ஈடு கட்டுதல் – ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியினை விடுவித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

அரசாணை (நிலை) எண். 243 நாள் : 11.12.2009

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை

படிக்கப்பட்டது:

1) அரசு ஆணை (நிலை) எண்.75, நநி(ம)குவ துறை, நாள் 01.06.2007
2) அரசு ஆணை (நிலை) எண்.130, நநி(ம)குவ துறை, நாள் 19.09.2007
3) அரசு ஆணை (நிலை) எண்.154, நநி(ம)குவ துறை, நாள் 12.08.2008

---

**ஆணை :**

தமிழில் பெயரிடப்படும் தமிழ் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கும் அரசின் முடிவின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு (மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள்) ஏற்படும் வருவாய் இழப்புகளை ஈடுகட்டும் வகையில் 2007–08 மற்றும் 2008–09 –ஆம் ஆண்டுகளில், வருடத்திற்கு ரூ.27.00 கோடி (ரூபாய் இருபத்தேழு கோடி மட்டும்) வீதம் தமிழ்த் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக அந்தந்த ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை மானியக் கோரிக்கை எண்.10–ல் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அத்தொகையை தமிழ் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக வழங்கி மேலே ஒன்று, இரண்டு, மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதேபோல், 2009–10–ற்கான வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் மானியக்கோரிக்கை எண்.10–ல், ரூ.30.00 கோடி (ரூபாய் முப்பது கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கம், நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடையே 90:10 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

2) எனவே, தமிழில் பெயரிடப்படும் தமிழ் திரைப்படங்களுக்கு முழுவரி விலக்களிப்பதனால், 2009–2010 ஆம் ஆண்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய ரூ.27.00 கோடி (ரூபாய் இருபத்தேழு கோடி மட்டும்) தமிழ்த் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும், இத்தொகையை அரசின் விருப்பத்திற்கேற்றவாறு நகர்ப்புர உள்ளாட்சிப் பகுதிகளின் மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பான புதுமையான திட்டங்களுக்காக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

3) மேலே, பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையான ரூ.27.00 கோடி (ரூபாய் இருபத்தேழு கோடி மட்டும்) இதற்கென தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரால் (Chairman and Managing Director, TUFIDCO) ஏற்கனவே பராமரிக்கப்பட்டுவரும் "நகர்ப்புர அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதி" கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறுவதற்கான கருத்துருக்களை நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் அரசிற்கு நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும். இவற்றில் தெரிவு செய்யப்பட்ட கருத்துருக்களுக்கோ அல்லது திட்டங்களுக்கோ உரிய அனுமதி வழங்கி நிதியை விடுவிக்க தக்க ஆணைகள் அரசால் வெளியிடப்படும். இதன் பேரில், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் (Chairman and Managing Director, TUFIDCO) மேற்படி துறைத் தலைவர்களுக்கு உரித்தான தொகையை மேற்படி நிதியிலிருந்து வழங்குவார் என்றும், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் (TUFIDCO) இதற்கான பயன்பாட்டு சான்றிதழினை துறைத் தலைவர்களிடமிருந்து பெற்று அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும், இப்பொருள் தொடர்பான நடவடிக்கைகள் பற்றி தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் (TUFIDCO) காலமுறை அறிக்கையினை அரசுக்கு அனுப்ப வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

4) மேலே, பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் தலைப்பில் வரவு வைக்கப்படும்.

> "3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் 103 – கேளிக்கை வரி – 1 திட்டத்தில் சேராதது AC கேளிக்கை வரியை தள்ளுபடி செய்வதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இழப்பீடு – 51 இழப்பீடு – 02– ஏனைய இழப்பீடு (DPC 3604 – 00–103–AC – 5123)"

செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மேற்காணும் கணக்குத் தலைப்பிற்கு மதிப்பீடு, ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலராக செயல்படுவார்.

5) மேலே, பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை ரொக்கமாக விடுவித்து கீழ்க்காணும் தலைப்பின் கீழ் வரவு வைக்கப்படலாம்:-

> "3443.00 Civil Deposits – 800 Other Deposits – BW Deposits of TamilNadu Urban Finance and Infrastructure Development Corporation Limited – (TUFIDCO) (DPC 8443 – 00 – 800 – BW – 000C (Receipts)"

6) மேலும், மேற்படித் தொகையை குறுக்குக் கோடிட்ட காசோலை வாயிலாகப் பெற்று அதனை தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் (TUFIDCO) கட்டுப்பாட்டில் உள்ள "நகர்ப்புர அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிதி" (TUIDRF) என்ற தனி வைப்பு நிதியில் சேர்க்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

7) ஊரக வளர்ச்சி அமைப்புகளுக்கான ஆணைகள் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் வெளியிடப்படும்.

3) இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு.எண். 68680 / ந.நி.(ம)கு.வ.(நிதி) / 09 நாள் 23.11.09 மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அ.சா.கு.எண். 17504 / C 1/09 – 2 நாள் 10.12.09 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலர்,
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை –9.
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம், சென்னை–35
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5.
ஆணையர், சென்னை மாநகராட்சி சென்னை – 3
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 108.
சம்பளக் கணக்கு அலுவலர் , சென்னை – 9
மாநில கணக்காயர், சென்னை – 18

<u>நகல்</u>

மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந II) துறை ,
சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.
14/12/10